بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுﷲல்லாஹுﷲத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/08/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுﷲமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சம்பவங்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஹஸ்ரத் உமர் (ரலி) காலத்தில் ஒரு யுத்தம் நடைபெற்றது. அது இரே (Ray) போர் என்று அழைக்கப்படுகிறது. இரே என்ற இடம் நேஷாபூரிலிருந்து 480 மைல் தொலைவில் உள்ளது. இரே -வில் வாழ்பவர்கள் ராஸீ என்று அழைக்கப்படுகின்றனர். பிரபல திருக்குர்ஆன் விரிவுரையாளரான ஹஸ்ரத் இமாம் ஃபக்ருத்தீன் ராஸீ (ரஹி) அவர்கள் இரே - வைச் சார்ந்தவர் ஆவார். இரே - உடைய ஆட்சியாளராக ஸியாஹோகஷ் பின் மெஹ்ரான் பின் பெஹ்ராம் இருந்தார். அவர் தமாவந்த், தபரிஸ்தான், குமிஸ், கோர்கன் வாசிகளை தமது உதவிக்காக ஆயத்தப்படுத்தினார். அப்போது முஸ்லிம்கள் இரே - யின் வழியில்தான் இருந்தார்கள். ஈரானிய தலைவர் அபுல் ஃபர்கான் ஸைனபி சமாதானத்திற்காக முஸ்லிம்களை சந்திக்க வந்தார். ஸைனபி அவர்கள் நயீம் பின் முக்ரின் அவர்களைப் பார்த்து, தாங்கள் என்னுடன் சில குதிரை வீரர்களை அனுப்பி வையுங்கள்; நான் இரகசிய பாதை வழியாக நகருக்குள் செல்கிறேன் என்றார். ஸைனபி அவர்களின் உதவியுடன் முஸ்லிம்கள் நகருக்குள் இரகசியமாக நுழைந்தனர். இவ்வாறு முஸ்லிம்கள் இந்நகரை கைப்பற்றினர். எழுத்துப்பூர்வமாக ஊர்வாசிகளுக்கு பாதுகாப்பு தரப்பட்டது.

ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டில் குமிஸ் மற்றும் கோர்கன் ஆகியவை வெற்றி கொள்ளப்பட்டன. (அதே போன்று) ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டில் தான் ஆஸர்பைஜான் வெற்றி கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சார்பாக ஆஸர்பைஜா(னுக்கு அனுப்பப்பட்ட குழுவி)னுடைய போர்க்கொடி உத்பா பின் ஃபர்கத் மற்றும் புகைர் பின் அப்துல்லாஹ் ஆகியோருக்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழிகாட்டாலுக்கிணங்கவே இவ்விருவரும் வெவ்வேறு திசைகளிலிருந்து தாக்குதல் தொடுத்தார்கள். ருஸ்தமின் சகோதரன் இஸ்ஃஃபந்யாஸ் பின் ஃபரக் ஸாத் -ஐ புகைர் எதிர்கொண்டார்; சண்டை நடைபெற்றது. இஸ்ஃஃபந்யாஸ் தோல்வியுற்று கைது செய்யப்பட்ட போது அவர் புகைர் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டார். மேலும் புகைர் அவர்களின் பிரதிநிதியாக மாறி எதிரிகளுக்கெதிராக முஸ்லிம்களுக்கு உதவி செய்து வந்தார். ஆகவே கொஞ்சம் கொஞ்சமாக முழு பகுதியும் புகைர் அவர்களின் அதிகாரத்தின் கீழ் வந்து விட்டது. இன்னொரு புறம் உத்பா பின் ஃபர்கத் அவர்களும் வெற்றி பெற்றார்கள். வெற்றிகளின் இத்தொடருக்குப் பிறகு அமீருல் முஃஃமினீன் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் செயலர் உத்பா பின் ஃபர்கத் அவர்களின் சார்பாக ஆஸர்பைஜான் உடைய மக்களுக்கு சமாதான உடன்படிக்கை எழுதப்பட்டது.

ஆஸர்பைஜானின் வெற்றிக்குப் பிறகு புகைர் பின் அப்துல்லாஹ் அவர்கள் ஆர்மீனியா நோக்கி முன்னேறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புகைர் அவர்களின் உதவிக்காக ஸுﷲராக்கா பின் மாலிக் அவர்களின் தலைமையில் இன்னொரு படையையும்

அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஸுராக்கா பின் மாலிக் அவர்களை அனைத்து படைகளுக்கும் தளபதியாகவும் நியமித்தார்கள். முஸ்லிம்கள் முன்னேறி வருவதையும், அவர்களின் உறுதியான நடவடிக்கைகளையும் கண்ட புராஸ் நகரத்தின் ஈரானிய ஆளுநர் ஸுராக்கா பின் மாலிக் அவர்களிடம் ஜிஸ்யாவுக்குப் பகரமாக உதவிப்படைகளை அனுப்பித்தருவதாக நிபந்தனை வகுத்து சமரசம் செய்து கொண்டார். ஆகவே ஆர்மீனியா, போர் இன்றி வெற்றி கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த சமாதானத்தைக்கண்டு மிக்க மகிழ்ச்சியையும், விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்கள். அதன் பிறகு ஸுராக்கா பின் மாலிக் அவர்கள் ஆர்மீனியாவைச் சுற்றியுள்ள மலைப்பிரதேசங்களை நோக்கி படைகளை அனுப்பி வைத்தார்கள். அதில் பெரும் வெற்றி கிடைத்தது.

பிறகு ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டில் குராஸான் வெற்றி நிகழ்ந்தது. ஜலூலா போருக்குப் பிறகு ஈரானிய அரசன் யெஸ்தெகெர்த் - இரே, கெர்மான், குராஸான் மற்றும் மர்வ் ஆகிய இடங்களில் தங்கியிருந்தான். அங்கு அக்கம்பக்கத்திலுள்ள அரபியல்லாத மக்களையும், பாரசீகர்களையும், ஹுர்முஸான் மக்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விட்டான். இறுதியாக முஸ்லிம்கள் வெற்றி கொண்ட பகுதிகளில் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டான். இந்த கடுமையான சூழ்நிலையின் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈரானில் படைகள் மேற்கொண்டு முன்னேற முஸ்லிம்களுக்கு அனுமதியளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைக்கிணங்க பஸ்ரா வாசிகளும், கூஃபா வாசிகளும் மிகப் பலமான தாக்குதல் தொடுத்து யெஸ்தெகெர்த் - ஐ பலமுறை இடம் பெயர நிர்பந்தித்து விட்டார்கள். இந்த சூழலில் யெஸ்தெகெர்த் - மர்வ்ரூஸ், பல்க் (Balkh) போன்ற இடங்களின் வழியாக நதியை கடந்து தப்பி ஓடக்கூடிய கட்டாய நிலைக்கு ஆளாகி விட்டான். இந்த புதிய சூழலில் நேஷாபூரிலிருந்து துகாரிஸ்தான் வரையிலான குடிமக்கள் முஸ்லிம்களுடன் சமாதானம் செய்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு குராஸான் வெற்றி குறித்த தகவல் கிடத்ததும், இந்த ஈரானியர்களுக்கெதிராக எவ்வித படையெடுப்பும் செய்து விடக்கூடாது; நமக்கும் அவர்களுக்குமிடையில் நெருப்பின் கடல் குறுக்கே நிற்க வேண்டும் என விரும்பியிருந்தேன் என்றார்கள். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அஹ்னஃப் பின் கைஸ் அவர்களை நதியைக் கடந்து சென்று படையெடுப்பு செய்ய வேண்டாம் என தடுத்து விட்டார்கள். யெஸ்தெகெர்த் பல்வேறு நகரங்களில் சுற்றித் திரிந்தான். (இறுதியில்) ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் கால கட்டத்தில் கொல்லப்பட்டான்.

அஹ்னஃப் பின் கைஸ் சார்பாக கிடைக்கக்கூடிய போர்ச்செல்வங்கள் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களிடம் வேதனை மிகு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் இறைக் கட்டளைக்கு மாறு செய்வதன் விளைவைக் குறித்து எச்சரித்தவாறு கூறினார்கள்: எதிரி, முஸ்லிம் சமுதாயத்தை அழித்து விடுவானோ என்ற அச்சம் எனக்கு இல்லை; முஸ்லிம்களாகிய நீங்களே உம்மத்தை அழித்து விடுவீர்களோ என்ற அச்சம் தான் உள்ளது.

*ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:* இன்று இவ்விஷயம் உண்மையாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். முஸ்லிம்களே முஸ்லிம்களின் தலையை வெட்டுகிறார்கள். ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது ஜிஹாது என்ற பெயரால் படையெடுப்பு செய்கின்றது.

பாரசீகத்தின் மத்திய நகரமும், சாசானிய அரசனின் புனிதஸ்தலமுமான இஸ்தக்ரை நோக்கி ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் முன்னேறினார்கள். அங்கு கடும் போருக்குப் பிறகு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் போர்ச்செல்வங்களை ஒன்று திரட்டினார்கள். அதில் ஐந்தில் ஒரு பகுதியை அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்கள். ஒரு அறிவிப்பின் அடிப்படையில் இஸ்தக்ரை முதன்முறையாக ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ அவர்கள் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் வெற்றி கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஸாரியா பின் ஸுனைம் அவர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு ஃபஸா மற்றும் தார் அப்ஜர்த் ஐ நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத்

இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றும் போது திடீரென உரத்த குரலில் يَا سَارِيَةَ الْجَبَل **'ஸாரியாவே! மலையை நோக்கி நகர்ந்து விடுங்கள்'** என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இச்சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ஸாரியாவே! மலையை நோக்கிச் செல்லுங்கள் என்ற சொற்றொடர் (அவர்களின் சொற்பொழிவுடன்) தொடர்பற்றதாக தெரிந்தது. ஆகவே இந்த சொற்றொடர் குறித்து மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இஸ்லாமியப் படையின் ஒரு தளபதியான ஸாரியா அவர்களைக் கண்டேன். எதிரி அவருடைய பின்புறத்திலிருந்து தாக்குவதற்காக வந்து கொண்டிருந்தான். இஸ்லாமியப் படை அழிவுக்குள்ளாகும் நிலையை நெருங்கி விட்டிருந்தது. ஆகவே நான் அவர்களுக்கு குரல் கொடுத்தவாறு, ஸாரியாவே! மலையை நோக்கி சென்று விடுங்கள் என்று கூறினேன்.

இச்சம்பவம் நடந்து அதிக நாட்கள் கடந்திருக்காது. ஸாரியா சார்பாக இதேபோன்ற கருத்தையுடைய ஒரு தகவல் வந்து விட்டது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவு அந்நேரத்தில் அவர்களுடைய கட்டுப்பாட்டை விட்டு வெளியேறிவிட்டது. மேலும் தொலைவு, தூரம் ஆகியவை ஒரு பொருட்டேயல்லாத, எல்லாவற்றின் மீது ஆற்றலுடைய இறைவனுடைய அதிகாரத்திற்குள் அது இருந்தது. **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இறை அறிவிப்பு சஹாபிகளிடமிருந்து நிரூபணம் ஆகவில்லை என்ற குற்றச்சாட்டு வீணான, தவறான வாதமாகும். ஸாரியா அவர்களின் படை அபாயகரமான நிலையில் இருப்பதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தகவல் பெறுவது இறை அறிவிப்பு அன்றி வேறு என்ன?

ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் சுஹைல் பின் அதீ (ரலி) அவர்களுடைய கைகளால் கிர்மான் வெற்றி கொள்ளப்பட்டது. அதேபோன்று ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டில் குராஸானுடைய மிகப்பெரிய பகுதியான சஜிஸ்தான் வெற்றி கொள்ளப்பட்டது. மிகப் பிரபலமான ஈரானிய வீரர் ருஸ்தம் இந்த பகுதியைச் சார்ந்தவர்தான். மக்ரான் வெற்றியும் ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இங்கு முஸ்லிம்கள் ஒன்றிணைந்து சிந்துடைய அரசனுக்கெதிராக போர் செய்தார்கள்; மேலும் அவனை தோல்வியுறச் செய்தார்கள்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* ஃபாரூக்கிய (அதாவது உமர் பாரூக் (ரலி) அவர்களுடைய) வெற்றிகளின் கடைசி எல்லை இந்த மக்ரானாகத்தானிருந்தது. பலாதுரி எனும் வரலாற்றாசிரியரைப் பொறுத்தவரை ஃபாரூக் அவர்களுடைய காலகட்டத்தில் டேபல் (debal) உடைய தாழ்ந்த பகுதிகள் மற்றும் தாணா வரையிலும் முஸ்லிம் படைகள் வந்தடைந்தன. இது சரியானது என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் சிந்து மற்றும் இந்தியா வரை இஸ்லாம் வந்தடைந்து விட்டது.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் குறித்த குறிப்பு இனிமேலும் தொடரும் என்று கூறியவாறு ஹுஸூர் அவர்கள் ஒரு Turkish internet radio வை துவக்கி வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். இந்த ரேடியோ மூலமாக உலகம் முழுவதிலும் 20 க்கும் அதிகமான நாடுகள் பயனடையும். இந்த ரேடியோ சேனலை ஆயத்தம் செய்யக்கூடிய நற்பேறு ஜெர்மனியுடைய தப்லீக் துறைக்கு கிடைத்துள்ளது. ஜெர்மனியுடைய தப்லீக் துறையின் இந்த முயற்சியை அல்லாஹ் ஏற்றுக் கொண்டவாறு இந்த புதிய இன்டர்நெட் ரேடியோவை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக அல்லாஹ் ஆக்குவானாக! என்று ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.*

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் சில மர்ஹூம்களுடைய நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு ஜனாஸா ஃகாயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். அத்துடன் மதிப்பிற்குரிய செய்யது தாலிஃ அஹ்மத் சாஹிப் மர்ஹூம் அவர்களைப் பற்றி எடுத்துரைக்கும் போது, நம்முடைய நேசத்திற்குரியவரான தாலிஃ அவர்களுடைய ஜனாஸா இன்னும் வந்தடையவில்லை; அது வந்த பிறகு ஜனாஸா தொழுகை தொழ வைக்கப்படும். மேலும் இன்ஷா அல்லாஹ்! அவரைப் பற்றிய குறிப்பும் எடுத்துரைக்கப்படும் என்று கூறினார்கள்.*

*இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காதியானின் அக்ஸா மற்றும் முபாரக் பள்ளிவாசல்களின் முன்னாள் ஊழியர் மதிப்பிற்குரிய மஹ்மூது அஹ்மத் சாஹிப் மர்ஹூம் அவர்களைப் பற்றிய குறிப்பை எடுத்துரைத்தார்கள்:* **அவர்கள் 74 ஆம் வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் அவர்கள் கர்நாடகா மாநிலத்தின் பெல்காமைச் சார்ந்த மக்தூம் ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். அவர் கர்நாடகாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து காதியான் வந்துவிட்டார். 28 வருடங்களாக அக்ஸா மற்றும் முபாரக் பள்ளிவாசல்களில் 'காதிம் மஸ்ஜித்' ஆக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். மர்ஹூம் அவர்கள் மூஸி ஆவார்கள். மர்ஹூம் அவர்கள் தொழுகை, நோன்பு ஆகியவற்றைப் பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், துஆ செய்து வரக்கூடியவராகவும் இருந்தார்கள். பள்ளிவாசலுடன் அவருக்கு குறிப்பான பிணைப்பு இருந்தது. மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்களையும், ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.**

*அதன் பிறகு இந்தியா - கேரளாவைச் சார்ந்த அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மனைவியாகிய சவ்தா சாஹிபா அவர்களின் நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்:* **ஜூலை 22 ஆம் தேதி 76 வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூமா அவர்கள் கபாபீர் உடைய முபல்லிக் இன்சார்ஜ் ஆகிய ஷம்சுத்தீன் சாஹிப் மலபாரி அவர்களுடைய தாயார் ஆவார்கள். ஷம்சுத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்: என்னுடைய தாயார் அவர்கள், பாலக்காடு மாவட்டம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளினுடைய முதல் அஹ்மதியான, 1937 ஆம் ஆண்டு பைஅத் செய்வதற்கான நற்பேறு பெற்ற V.T. முஹம்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகளாவார்கள். நீண்ட காலம் வரை எதிரிகளின் சார்பாக கடும் அநீதிகளை எதிர்கொண்டு வந்தார்கள். அந்த boycott -ன் காலகட்டத்தில்தான் என்னுடைய தாய் வழி பாட்டியும், அவருடைய பெரிய மகளும் மரணமடைந்தார்கள். அப்பொழுது (என்னுடைய) தாயாருக்கு ஒன்றரை வயதாக இருந்தது. தாய்வழி பாட்டி மரணமடைந்த போது எதிரிகள் அடக்கம் செய்யக்கூட விடவில்லை. ஆகவே 40 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஒரு நகரத்தின் பொது அடக்கஸ்தலத்தில் அவர்களை அடக்கம் செய்ய வேண்டியதாகி விட்டது. என்னுடைய தாய் வழி பாட்டனார் தனது சிறுவயது பெண் குழந்தையுடன் ஹிஜ்ரத் செய்து விட்டார்கள். இவ்வாறு (என்னுடைய) தாயார் குழந்தைப் பருவம் முதலே பல்வேறு சோதனைகளைக் கடந்து கொண்டேயிருந்தார்கள்.**

**மர்ஹூமா அவர்கள் தொழுகை, நோன்பு ஆகியவற்றை கடைபிடிப்பவராகவும், மூஸியா ஆகவும் இருந்தார்கள். படைப்பினங்கள் மீதான அனுதாபம் அவர்களிடத்தில் நிறைந்து காணப்பட்டது. ஒவ்வொரு கவலையுள்ள மனிதருக்காகவும் துஆ செய்து வந்தார்கள். அம்மனிதர் தம் முன் இருப்பார் என்றால், அவருக்கு உதவி செய்வது மர்ஹூமா உடைய வழக்கமாக இருந்தது. கணவர் மட்டுமின்றி நான்கு மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமா உடைய மகன் வழி பேரனும் வாழ்வை அர்ப்பணித்துள்ளார். ஒரு மகன் முபல்லிக் ஆவார். அவர் வெளி நாட்டில் இருப்பதன் காரணமாக ஜனாஸாவில் அவரால் ஆஜராக முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமா உடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக.**

*இவர்களைத் தவிர, மொரோக்கோவைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அல் முக்தார் கத்தா (Qattah) சாஹிப் மற்றும் ஃபேஸ்லாபாதைச் சார்ந்த ஷேக் அப்துல் மஜீது சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய செய்யிதா மஜீது சாஹிபா ஆகியோரின் நற்குறிப்பையும் எடுத்துரைத்தார்கள். ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் மஃபிரத்திற்காகவும், உயர் அந்தஸ்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ
وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ
لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

*(தமிழாக்கம்: முஅல்லிம் M. நிஜாமுத்தீன்)*